கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலும் பெரிய நகரங்களிலும் கீழே குறிப்பிட்டுள்ள அளவு விதங்களில் சர்க்கரை வழங்கப்படுகிறது :–

| குடும்ப வருவாய் | (மாதமொன்றுக்கு) வழங்கப்படும் அளவு. |
|---|---|
| ரூ. 300-ம் அதற்குக் குறைவாகவும் | 2 கிலோ. |
| ரூ. 301-லிருந்து ரூ. 499 வரை | 4 கிலோ. |
| ரூ. 500-ம் அதற்கு மேலும் | 6 கிலோ. |

கிராமப்பகுதிகளில், உள்ளூர் நிலைமைகளையொட்டி ஒதுக்க அளவுகள் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் வரையறுக்கப் படுகின்றன. பொதுவாக, அங்கு, குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 1 கிலோவும் அதிகமாக 4 கிலோ வரை வழங்கப்படுகிறது.

## இணைப்பு II

[289-ம் பக்கத்தில் உள்ள 263-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

1972-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற வன விலங்கு வார விழாவையொட்டி, கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன :—

(1) சென்னை வானொலியில், மின் துறை அமைச்சர், வனத் துறைத் தலைவர் ஆகியோரது உரைகள் முறையே 30—9—1972 அன்றும், 4—10—1972 அன்றும் ஒலி பரப்பப்பட்டன.

(2) 1—10—1972 அன்று மாலையில், சென்னை கிண்டியிலுள்ள சிறுவர் பூங்காவில், தமிழக ஆளுநரின் தலைமையில், பொதுக் கூட்டமும், கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றன.

(3) 2—10—1972 அன்று, எழும்பூர் அரும்பொருட் காட்சியக ஆரங்கில், வன விலங்குகள்பற்றிய புகைப்பட, ஓவியக் கண் காட்சி நடைபெற்றது.

(4) கல்லூரி, பள்ளி மாணவர்களிடையே, வன விலங்கு களைப்பற்றிய கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1973 மார்ச் 6]

(5) சென்னையில் உள்ள கல்லூரிகளில், வன விலங்குகளைப் பற்றிய நிழற் படங்கள் காட்டப்பட்டன ; கூட்டங்களும் நடத்தப் பட்டன.

(6) சரணாலயங்கள், மிருகக் காட்சி சாலை, அரும் பொருட் காட்சியகங்களில், சிறுவர்களுக்கு விசேஷ நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

(7) கல்லூரி, பள்ளி மாணவர்களைச் சரணாலயங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லுமாறு, கல்லூரி, பள்ளிப் பாட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

(8) 10—10—1972 அன்று மாலை, சென்னை கிண்டியிலுள்ள சிறுவர் பூங்காவில், மின் துறை அமைச்சர் தலைமையில், பொதுக் கூட்டமும், கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றன. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

(9) மாவட்டங்களிலும், வன விலங்கு வாரத்தையொட்டிப் பொதுக் கூட்டங்களையும் மற்ற நிகழ்ச்சிகளையும் சிறப்பான முறையில் நடத்துவதற்கு மாவட்ட வன அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

(10) செய்தித் தாள்களில், வன விலங்குகளைப்பற்றிய தனி அனுபந்தங்கள் வெளியிடப்பட்டன.

TRUTH ALONE TRIUMPHS